# THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN

## முதற்பருவம்
## புதுக்கவிதை இலக்கியம்

1. ஈரோடு தமிழன்பன் யாருடைய கவிதைப் பரம் பரையைச் சேர்ந்தவர்?
   பாரதிதாசன் கவிதைப் பரம்பரையைச் சேர்ந்தவர்.
2. ஈரோடு தமிழன்பன் படைப்புகள் யாவை?
   தோணிகள் வருகின்றன, ஊமை வெயில், சூரியப் பிறைகள் தமிழன்பன் கவிதைகள், வணக்கம் வள்ளுவ.
3. சென்ரியூ என்றால் என்ன?
   கராய் ஹச்சி மோன் என்னும் ஜப்பானியரின் புனைப்பெயர் சென்ரியூ என்பதாகும்.
4. குழந்தை ஏன் சாப்பிடவில்லை?
   பொம்மைக்குப் பசி என்பதால் குழந்தை சாப்பிடவில்லை.
5. குழந்தை எதைக் கேட்டு அடம்பிடித்தது?
   ஆசிரியரின் பிரம்பைக் கேட்டு.
6. கவிஞர் இரா. மீனாட்சியின் நூல்கள் குறிப்பிடுக.
   தீபாவளிப் பகல், வாசனைப்புல், நெருஞ்சி, ஓவியா.
7. கவிஞர் இரா. மீனாட்சி இணையாசிரியராக எழுதிய நூல்கள் யாவை?
   மகாகவி பாரதியார் கவிதைகளில் புதுச்சேரி, அரவிந்தன் போற்றிய அருந்தமிழ்ச் சான்றோர்.
8. மருத்துவச் சேவைக்காக கவிஞர் இரா. மீனாட்சி பெற்ற விருது யாது?
   ஸ்ரீ புத்து மகரிஷி அறக்கட்டளை வழங்கிய சித்த மருத்துவச் சேவை செம்மல்.
9. இளம் சிற்பி என்ன கூறுகின்றான்?
   கல்லுக்குள் உயிர் இருக்கு.
10. உளிகள் சொன்ன கதை என்ன?
    "நான்தானே புத்தரின் தாமரை இருக்கை", "நான்தானே கலைமகளின் வீணை".
11. சென்னை வானொலியில் முதன் முதலாக புதுக்கவிதை பாடியவர் யார்?
    கவிப்பேரரசு வைரமுத்து
12. கவிஞர் வைரமுத்து இயற்றியுள்ள தன் வரலாற்று நூலின் பெயர் என்ன?
    இதுவரை நான்
13. கவிஞர் வைரமுத்துவின் எந்த நூலிற்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்தது?
    கள்ளிக்கட்டு இதிகாசம்
14. குண்டூசியை கவிஞர் எங்ஙனம் உருவகப் படுத்துகின்றார்?
    கருப்பாணி பெற்ற பிள்ளை, காகிதக் களத்துக் கத்தி, பல் வீட்டிற்கு ஒட்டடைப் போக்கும் குச்சி.
15. கவிஞர் பழநி பாரதியை சுரதா எவ்வாறு பாராட்டுகின்றார்?
    இதோ ஒரு மகாகவி புறப்பட்டு விட்டான்.
16. கவிஞர் பழநிபாரதி பெற்ற விருதுகள் யாவை?
    இளையராஜா இலக்கிய விருது, கலைமாமணி விருது, கலை வித்தகர் கண்ணதாசன் விருது.
17. கவிஞர் எவருக்கெல்லாம் மரக்கன்றுகளைத் தரப்போவதாகக் குறிப்பிட்டுள்ளார்?
    குழந்தையிடம், காதலியிடம், நோயாளியிடம், துறவியிடம்.

## ஐந்து மதிப்பெண்

18. ஒரு வண்டி சென்ரியூ கவிதையில் ஈரோடு தமிழன்பன் கூறும் கருத்துகள் யாவை?
    - ❖ பேசாதீர்கள் என்றார் ஆசிரியர். ஆசிரியரும் பேசவில்லை பாடம் நடந்தது.
    - ❖ ஆசிரியரின் பிரம்பைக் கேட்டு குழந்தை அடம் பிடித்தது.
    - ❖ அம்மா இந்தப் பாப்பாவை விற்று விட்டு வேறு பொம்மை வாங்கலாம் என்றது குழந்தை
    - ❖ சிலையைக் காணாமல் வெளியே சென்று வந்த கடவுள் சிலையாய் நின்றார்.
    - ❖ பொம்மைக்குப் பசி குழந்தை சாப்பிடவில்லை.

19. சிற்ப எழுத்து கவிதை வாயிலாக கவிஞர் இரா. மீனாட்சி குறிப்பிடுவன யாவை?
    - ❖ சிறந்த தச்சன் நன்றாக விளைந்த கல்லைப் பார்த்து தான் செதுக்க வேண்டிய பிம்பங்களை இனம் பிரிப்பான்.
    - ❖ செவ்வரி ஓடும் கல்லுக்குள் மாதவி நடனமாடுவாள்.
    - ❖ குட்டைக் கல்லுக்குள் புத்தரின் முகம் காட்டும்.
    - ❖ பச்சைப் பாறையில் பிள்ளையார் படுத்திருப்பார்.
    - ❖ நெடுங்கல்லில் கருநாகம் படமெடுக்கும்.
    - ❖ "இளஞ்சிற்பி கல்லுக்குள் உயிர் இருக்கு" என்பான்.
    - ❖ நர்மதை நதி, இமய மலைத் தொடர், விந்தியக் குகைக் கூரை முதலான இடங்களிலிருந்து வெட்டி எடுத்து வரும் போது உளிகள் பேசிக் கொள்ளும்.
    - ❖ "நான்தான் புத்தனின் தாமரை இருக்கை, கலைமகளின் வீணை" என்று பேசும்.
    - ❖ கல்லும் உளியும் சிற்பியின் விரல்களும் என் கவிதை வரிகளும் ஒரே நேர் கோட்டில்.

20. குண்டூசி குறித்து கவிஞர் வைரமுத்து கூறும் கருத்துகள் யாவை?
    - ❖ கழுத்தில்லாத தொப்பிக்காரன்
    - ❖ மின்னல் போல மறைந்து துன்பம் கொடுக்கும் இரும்புக் குச்சி.
    - ❖ கருப்பாணி பெற்ற பிள்ளை, காகிதக் களத்துக் கத்தி.
    - ❖ சிறுதாளை ஒன்றாய் இணைக்கும் ஒற்றுமைச் சின்னம்
    - ❖ விலையில்லாத சரக்காய் என்னைப் படைத்தவன் பாவி. உன்னைப் படைத்தவன் ஞானி.
    - ❖ மனிதருக்கு எடையிலே குறைந்து போனாய். இயல்பிலே உயர்ந்து போனாய்.
    - ❖ வெறுப்பினால் தூர வீசும் கிறுக்கரின் கையில் அகப்படாமல் ஆடவைப்பாய்.
    - ❖ உனக்குள்ள தன்மானம் அறுபதில் ஒரு பங்குகூட மனிதருக்கு இல்லை.

21. நான்கு மரக்கன்றுகள் என்னும் கவிதையில் கவிஞர் கூறுவன யாவை?
    - ❖ வானத்தை நோக்கி விரியும் கரங்களைக் கொண்ட மரங்கள் தமக்காக இறைஞ்சுவதில்லை.
    - ❖ அழைப்பு விடுக்கும் இலையின் ஆனந்த நடனத்தில் நாம் பங்கு கொள்வதில்லை.
    - ❖ மலரும் பூவில் அன்பின் ரகசியத்தை வேறெங்கும் கேட்டதில்லை.
    - ❖ இலைகள் உதிர்ந்த மரத்தின் ஆழ்ந்த அமைதியை உணர்ந்தது இல்லை.
    - ❖ நான்கு மரக்கன்றுகளில் ஒன்று குழந்தையிடம், மற்றொன்று காதலியிடம், இன்னொன்று நோயாளியிடம் இறுதியாக ஒன்று துறவியிடம்.